# சிவகங்கை நகராட்சி

## சாதாரணக்கூட்டம்

2019ம் ஆண்டு மே 31ம் நாள் விகாரி வருடம் வைகாசி 17ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**தலைமை திரு.பி.அயூப்கான், பி.காம்.,எம்.ஏ.,பி.எட்.,**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**

**சிவகங்கை நகராட்சி.**

# <u>பொருள்கள்</u>

1.சிவகஙகை நகராட்சி ஆணையாளர் அவர்களின் 2019 ஆம் ஆண்டு மே மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மான எண்.. 401

தீர்மானம்அனுமதிக்கப்பட்டது.

2. சிவகஙகை நகராட்சி பொறியாளர் அவர்களின் 2019 ஆம் ஆண்டு மே மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மான எண்.. 402

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

3. சிவகஙகை நகராட்சி, பொன் விழா ஆண்டு நேர்வினை தொடர்ந்து ஒருஙகிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2014–15ன் கீழ் (IUDM) ரூ.11.00 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திருவாளர்கள் Aqua Design India PVT Ltd, Chennai நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழஙகப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் 21.200கி.மீ நீளத்திற்கு 300mm DI பைப் பதிக்கப்பட்டும், 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட தரைமட்ட நீர்தேக்க தொட்டி கட்டப்பட்டும் மற்றும் 3 எண்ணிக்கை போர்வெல் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.10,72,41,577/– பட்டியல் தொகை வழஙகப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தில் உள்ள மீதப்பணிகளான 2 எண்ணிக்கை 50HP Motor பொருத்துதல், Auto Transformer பொருத்துதல் மற்றும் LT Panel Board பொருத்துதல் ஆகிய பணிகளை விரைந்து முடிக்க கோரி 15.09.2017,27.09.2017,20.10.2017, 11.07.2018 மற்றும் 05.12.2018ஆகிய தேதிகளில் அறிவிப்பு கடிதம் வழஙகப்பட்டும் மீதமுள்ள பணிகளை முடிக்கவில்லை. மேலும் மேற்படி நிருவனத்தால் வழஙகப்பட்ட முகவரிக்கு நேரில் சென்று விசாரிக்கையில் அந்த நிருவனம் அஙகு செயல்படவில்லை.

எனவே மேற்படி நிருவனத்தை தொடர்பு கொள்ள முடியாததால் மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்க இயலாத சூழ்நிலையில் உள்ளது. மேலும் மேற்படி பணியானது குடிநீர் சம்மந்தப்பட்ட பணியென்பதாலும் தற்போது நிலவி வரும் கடும் வறட்சியை சமாளிப்பதற்கு ஏதுவாக மீதமுள்ள பணிகளை துறை மூலம் மேற்கொள்வதற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1. மேற்படி பணியானது திட்டப்பணி என்பதால் விரைந்து முடித்து பணி முடிவறிக்கை சமா்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், பொது மக்கள் நலநனக் கருத்தில் கொண்டும் தற்போது நிலவி வரும் கடும் வறட்சியை சமாளிப்பதற்கு ஏதுவாகவும், இப்பணியை துறை மூலம் மேற்கொள்ள தனி அலுவலா் அனுமதி வழஙகலாம்.
2. இத்திட்டத்தில் மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்க பலமுறை அறிவுறுத்தப்பட்டும் நாளது தேதி வரை முடிக்கப்படாததால் திருவாளர்கள். Aqua Design India Pvt Ltd, Chennai. நிறுவனத்தை கருப்பு பட்டியலில் சேர்க்கவும், பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகைகளை நிறுத்தி வைப்பதற்கும் தனி அலுவலா் அவர்களின் அனுமதி வழஙகலாம்.

தீர்மான எண்.. 403

தீர்மானம்.. அனுமதிக்கப்பட்டது.

4. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், பொதுக் கழிப்பிடஙகள் மற்றும் சமுதாயக் கழிப்பிடஙகளில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளவும், பொது சுகாதார பராமரிப்பு பணிகளுக்கு தேவையான கிருமி நாசினிகளான பிளிச்சிட் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு, ஃபினாயில் போன்றவற்றை பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு கீழ்க்கண்ட விவரப்படி அரசு நிறுவனமான 'தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்திடம் இருந்து கொள்முதல் செய்யவும், அதற்குண்டான உத்தேச செலவினம் தொகை ரூ.80000/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>தேவையான அளவு</u>

1. நீர்த்த சுண்ணாம்பு – 2000 கிலோ
2. பிளிச்சிங பவுடர் – 1000 கிலோ
3. ஃபினாயில் – 200 லிட்டர்

<u>அலுவலகக்குறிப்பு</u>..—

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் 14.05.2019ம் தேதிய முன் அனுமதியின் படி பணி உத்தரவு வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 404

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

5. சிவகஙகை நகராட்சி பொறியியல் பிரிவிற்கு அரசு ஆணை எண் 299 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகும் துறை நாள் 20.08.1992ல் அடியிற்காணும் பதவிகள் தற்காலிகமாக தோற்றுவித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டள்ள பணியிடஙகளை 30.09.2011ம் முடிய கால நீட்டிப்பு செய்து, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண்..15088/2009/எப்3 நாள்..02.06.2011ல் உத்திரவு பெறப்பட்டுள்ளது.

30.09.2011ல் அனுமதி காலம் முடிவடைவதால் 01.10.2011 முதல் 30.09.2012 முடிய உள்ள காலத்திற்கு அனுமதி கோரி மன்றம் தனது தீர்மான எண் 728 நாள் 09.09.2011ல் அனுமதி அளித்துள்ளதால், இவ்வலுவலக கடித ந.க.எண்.சி1/3164/04 நாள் 03.02.2012ல் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டு உத்திரவு எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் 01.10.2012 முதல் 30.09.2013 முடிய காலத்திற்கு நீட்டிப்பு செய்து நகர்மன்ற தீர்மானம் எண் 457 நாள் 28.09.2012ல் அனுமதி வழஙகியதையும் 01.10.2013 முதல் 30.09.2014 முடிய நீட்டிப்பு செய்து நகர்மன்ற தீர்மானம் எண் 896 நாள் 11.07.2013ல் அனுமதி

| வ.எண் | பணியிட பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | குடிநீர் திட்ட கண்காணிப்பாளர் | 1 |
| 2 | மின் பணியாளர் நிலை –2 | 1 |
| 3 | இழுவை வண்டி ஓட்டுநர் | 1 |

வழஙகியதையும் 01.10.2014 முதல் 30.09.2015 வரை நீட்டிப்பு செய்து நகர் மன்ற தீர்மானம் எண் 1406 நாள் 17.10.2014ல் அனுமதி வழஙகியள்ளதையும், இவ்வலுவக கடித ந.க.எண்/சி1/3164/04 நாள் 03.12.2014ல் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பட்டு உத்திரவு எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணியிடங்களில் மின் பணியாளர் நிலை–2, பணியிடை பணியாளர் திரு. சூ. ஜான்பீட்டர் என்பவர் 30.11.2014ல் சுயவிருப்ப ஓய்வு பெற்றுள்ளார்.

எனவே மின் பணியாளர் நிலை –2 பணியிடத்தை 01.12.2014 முதல் நிரந்திரமாக ரத்து செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஆகவே தற்போது குடிநீர் திட்ட கண்காணிப்பாளர் பணியிடம் –1, இழுவை வண்டி ஓட்டுநர் பணியிடம் –1, ஆகியவற்றை 01.10.2016 முதல் 30.09.2017 வரை 01.10.2017 முதல் 30.09.2018 வரை 01.10.2018 முதல் 30.09.2019 ஆகிய ஐந்தாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து வைத்துக்கொள்ளவும், மேற்படி பணியிடங்கள் நகராட்சியின் அத்தியாவசியம் பணியிடங்களாக இருப்பதால் நிரந்தமாக வைத்துக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 405

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

6. இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்த திரு. கே.கே.ராதாகிருஷ்ணன் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 31.05.19ல் பணி ஓய்வு பெற்றுள்ளார். அன்னாருக்கு சிறப்பு சேமநலநிதி தொகையின் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.10000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>..–

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் முன் அனுமதி அளித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்..406

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

7. சிவகங்கை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.2537/ஜே1/2017, நாள்..14.02.2017ன் படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான 1 முதல் 27 வார்டுகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் டெங்கு, சிக்கன்குனியா மற்றும் கொசுக்களினால் உருவாகும் தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டு கொசு ஒழிப்பு மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள 55 மஸ்தூர் பணியாளர்களை தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 2/2019 முதல் 05/2019 வரை 4 மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பொதுசுகாதார அவசியம் கருதி தொடர்ச்சியாக 6/2019 முதல் 8/2019 (மூன்று மாதங்கள்) வரை தற்காலிகமாக மஸ்தூர் பணியாளர்களை நியமனம் செய்து கொள்ளவும், 6/2019 ம் மாதம் முதல் மஸ்தூர் பணியாளர்களின் ஊதியத்தில் EPF 12.46% பிடித்தம் செய்து கொள்ளவும், ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு தொகை ரூ.274/– வீதம் 26 நாட்களுக்கு (மாதம் ஒன்றுக்கு) ரூ.7124/– வீதம் 55 பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தொகை ரூ.391820/– வீதம் 3 மூன்று மாதங்களுக்கு உண்டான உத்தேச செலவினம் தொகை ரூ.1175460/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு..–</u>**

1. பொதுசுகாதார அவசியம் கருதி டெங்கு தடுப்பு பணிகளை மேற்கொள்ள 55 தற்காலிக பணியாளர்களை நியமனம் செய்துகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

தீர்மான எண்.. 407

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

8. சிவகஙகை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 98 LPCD குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தற்போது பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதால் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 135 LPCD குடிநீர் வழஙக வேண்டியுள்ளது. இதற்கு கூடுதலாக 2.00 MLD குடிநீர் தேவைப்படுகிறது. இந்நிலையில் சிவகஙகை மாவட்டத்தில் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் நாட்டரசன்கோட்டை பேரூராட்சி, இதர 7 பேரூராட்சிகள் மற்றும் 2452 கிராம குடியிருப்புகளுக்கு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வு பணிகள் மேற்கொள்ள இருப்பதால் இதில் சிவகஙகை நகராட்சியை இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ள நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிட கோரி வரப்பெற்ற செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – மதுரை அவர்களின் கடிதம் எண்..2005/F-SVGCWSS/JDO/2018 நாள்..20.05.2019ம் தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், மற்றும் இத்திட்டத்தில் இணைந்து கூடுதல் குடிநீர் பெற்று விநியோகிப்பதற்கு சிவகஙகை நகராட்சியினை சேர்க்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**

1. சிவகஙகை மாவட்ட காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தில் சிவகஙகை நகராட்சியினை சேர்த்து கொள்வதற்கும், இத்திட்டத்திற்கான மதிப்பீட்டு தொகையில் சிவகஙகை நகராட்சியின் பஙகுத் தொகையை அரசு மானியமாக பெற்று வழஙகுவதற்கு அனுமதி வழஙகலாம்.
2. மேற்படி திட்டத்திற்கான ஆய்வுக் கட்டணம் ரூ.200000/–ஐ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு, நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலுத்த அனுமதி வழஙகலாம்.

தீர்மான எண்.. 408

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

9. நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழஙகுதல் துறை அரசாணை எண்..268 நாள்..05.05.1989 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலக கடித ந.க.எண்..61838/86/சி2 நாள்..31.01.83 ன்படி, இந்நகராட்சி பொது சுகாதாரப் பணிக்கு ஒரு லாரி ஓட்டுநர் பணியிடம், ஒரு துலக்குநர் பணியிடம் ஆகியவற்றை ஒரு வருடம் தோற்றுவித்துக் கொள்ள அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரண்டு பணியிடஙகளுக்கும் 30.09.2013 வரை நீட்டித்து வைத்துக் கொள்ள அனுமதி அளித்து, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலக செயல்முறை உத்திரவு மூ.மூ.எண்..26752/2013/ஜே3 நாள்..22.08.2013ல் உத்திரவு பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரண்டு பணியிடஙகளும் 01.10.2013 முதல் 30.09.2019 வரை உள்ள காலத்திற்கு நீட்டிப்பு செய்வதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்..897 நாள்..11.07.2013ல் அனுமதி பெறப்பப்பட்டுள்ளது.

இப்பணியிடஙகளை 01.10.2014 முதல் 30.09.2015 வரை நீட்டித்து வைத்துக் கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்..1408 நாள்..17.10.2014ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட இரண்டு பணியிடஙகளை 01.10.2015 முதல் 30.09.2016, 01.10.2017 முதல் 30.09.2018 ,01.10.2018 முதல் 30.09.2019 வரை மற்றும் 01.10.2019 முதல் 30.09.2020 வரை நீட்டித்து வைத்துக் கொள்ளவும், இரண்டு பணியிடஙகளும் பொது சுகாதாரப் பணிக்கு அத்தியாவசியப் பணியிடமாக இருப்பதால் நிரந்திரமாக வைத்துக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 409

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

**10.** சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியர் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தம் அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிக்ள் வரவேற்கப்பட்டு 2017–2018ம் ஆண்டிற்கு 01.01.2017 முதல் 31.12.2017 வரை ஒரு ஆண்டிற்கு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த வைப்புத் தொகையாக தொகை ரூ.3,69,300/– 12.04.2017 அன்று காசோலையாக இந்நகராட்சிக்கு செலுத்தப்பட்டது. மேலும் தற்போது 31.12.2017 முதல் பணிகாலம் முடிவடைந்த நிலையில் இந்நிறுவனத்தில் ஒப்பந்ததாரருக்கு வழஙகப்பட்ட தொகைக்கு வருமானவரி தொகை ரூ.1,15,178/– பிடித்தம் செய்யப்படவில்லை என தணிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தணிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வருமான வரி தொகை ரூ1,15,178/– பிடித்தம் செய்து வருமான வரி துறைக்கு செலுத்தவும் மீதமுள்ள தொகை ரூ.2,54,122–யை அந்நிறுவனத்திற்கு வழஙக மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 410

தீர்மானம்..அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
சிவகஙகை நகராட்சி